# இரட்சிப்புக்கு அடுத்தபடியாக



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# ஒரு மனைவி இரட்சிப்புக்கு அடுத்தப்படியாக, ஒரு மனைவியே மேலான காரியமாக இருக்கிறாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 59-04-19A என் சுய சரிதை

88 **எனவே, இப்பொழுது ஒரு நல்ல ஸ்திரீ ஒரு மனிதனின் கிரீடத்தில் ஒரு இரத்தினம் போலிருக்கிறாள். அவள் கௌரவிக்கப்பட வேண்டும்.**

அவள் என் தாயார் ஒரு ஸ்திரீ யாயிருக்கிறாள். என் மனைவி ஒரு ஸ்திரீயாயிருக்கிறாள். அவர்கள் அழகான வர்கள். நான் உயர்வாக மதிக்கிற ஆயிரக் கணக்கான கிறிஸ்தவ சகோதரிகளை உடையவனாய் இருக்கிறேன்.

தேவன் அவர்களை என்னவாக உண்டாக்கினாரோ, அதாவது ஒரு தாயின் தன்மையாயும், ஒரு அருமையான ராணி யாயும் உண்டாக்கினதை அவர்கள் மதிக்க

முடிந்தால் நலமாயிருக்குமே! அதெல்லாம் நல்லதுதான்.

**தேவன் ஒரு மனிதனுக்கு கொடுக்க கூடிய மேலான காரியங்களில் அவள் ஒன்றாய் இருக்கிறாள்.**

**ஒரு மனைவி இரட்சிப்புக்கு அடுத்தப்படியாக, ஒரு மனைவியே மேலான காரியமாக இருக்கிறாள்.**

அவள் ஒரு நல்ல மனைவியாக இருந்தால் நலமாயிருக்கும். ஆனால் அவள் அப்படியாய் இல்லையென்றால், சாலமோன், "ஒரு நல்ல ஸ்திரீயானவன் ஒரு மனிதனுடைய கிரீடத்திலுள்ள ஒரு இரத்தினமாய் இருக்கிறாள். ஆனால் ஒரு துர்நடத்தையுள்ள ஒருவளோ அல்லது நல்லவளாயிராத ஒருவளோ அவனுடைய

இரத்தத்தில் தண்ணீராய் இருக்கிறாள்” என்றான். அது உண்மையே.

அது சம்பவிக்கக்கூடிய மோசமான காரியமாய் இருக்கிறது.

**எனவே ஒரு நல்ல ஸ்திரீயானவள் நீங்கள் நல்ல மனைவியைப் பெற்றிருந் தால், சகோதரனே, நீ உயர்வான மரியாதையை அவளுக்கு செலுத்தத்தான் வேண்டும்.** அது உண்மையே நீங்கள் அதை செய்தாக வேண்டும்.

**ஒரு உண்மையான ஸ்திரீ, பிள்ளைகளே, நீங்கள் ஒரு உண்மையான தாயாரை, வீட்டிலேயே தரித்திருக்கிறவளைப் பெற்றிருந் தால், அவள் உங்களைக் குறித்து அக்கறை எடுக்க முயற்சிப்பவளாயிருந்தால், உங்களு டைய துணிகளை சுத்தமாக வைத்து, உங்களை பள்ளிக்கு அனுப்பி, இயேசுவைக்**

**குறித்து உபதேசிப்பவளாய் இருந்தால் அந்த இனிமையான வயதான தாயாரை உன்னிடம் உள்ள எல்லாவற்றோடும் கனப்படுத்த வேண்டும்.**

அந்த ஸ்திரீக்கு மரியாதை கொடுக்க வேண்டும்.

ஆம், ஐயா, ஏனென்றால் அவள் ஒரு உண்மையான தாயாக இருக்கிறாள்.

89 கென்டகி மலைகளிலுள்ள எழுத்தறிவின்மையைக் குறித்து அவர்கள் பேசுகிறார்கள். நீங்கள் அதை இங்கே இந்த ஒட்டுப் போட்ட காரியத்தில் காண்கிறீர்கள். அந்த வயதான தாய்மார்களில் சிலரால் இங்கே ஹாலிவுட்டுக்கு வந்து இந்த நவீன தாய்மார்களுக்கு உங்களுடைய பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று போதிக்க முடியும். அவளுடைய பிள்ளை

ஒரு இரவு தலைமுடி கலைந்து, குளிப்பு கால்சட்டை இவைகளோடு வரட்டும். நீங்கள் அதை என்னவென்று அழைப் பீர்கள். அவர்கள் அவர்களுடைய முகத் தில் பூசிக்கொள்ளும் அழகு சாதனங்கள் அவளுடைய ஆடையெல்லாம் ஒருபக்க மாக கசக்கப்பட்டதாய், இரவு முழுவதும் வெளியே இருந்து குடித்துவிட்டு ஓர் இரவு அவள் வந்தால், சகோதரனே, அவளை கனமான மர உச்சியின் கிளைகளில் ஒன்றை ஒடித்தெடுத்து அடித்தால் அதற்குப் பின்னர் அவள் ஒருபோதும் வெளியே போகவேமாட்டாள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன். அவள் அதைச் செய் வாள்.



ஒரு மனிதனுக்கு, அவன் அடைந்திருக்கும்
இரட்சிப்புக்கு அடுத்தபடியாக, அவன்
அடையும் மிகவும் விலையுயர்ந்த அணிகலன்
எதுவென்றால், ஒரு நல்ல
மனைவியேயாவாள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-01-08 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #3


287. இப்பொழுது, எனது அன்புள்ள, விலைமதிப்புள்ள, அருமையான சகோதரிகளே, (நான் இதை இவ்விதமாகக் கூறுவேனாக), உத்தமும், பண்பமைதியுள்ள, விலையுயர்ந்த அணிகலனாக இருக்கின்ற பெண்மையை நான் இழிவுபடுத்துவதாக நீங்கள் எண்ண வேண்டாம்.

ஸ்திரீயானவளைப் பற்றி, அவள் என்ன என்பதைப் பற்றி, இங்கே நான் காண்பிக்க விரும்புகிறேன். தயவு கூருங்கள், ஒலி நாடாவில் செய்தியைக் கேட்கப்போகும் பெண்களே, நான் உங்களை வசைபாட முயலவில்லை.

ஒளியைக் கொண்டுவரும் கர்த்தருடைய ஊழியக்காரனாக மாத்திரமே நான் இருக்கிறேன்.

ஒரு பெண் கெட்டவளாயிருந்தால், அவள்தான் இப்பூமியில் இருக்கின்ற அனைத்து ஜீவராசிகளுக்குள்ளேயே மிகவும் கீழ்த்தரமானவளும், ஒழுக்கக் கேடான ஜென்மமாக இருக்கிறாள்.

ஒரு மனிதனுக்கு, அவன் அடைந் திருக்கும் இரட்சிப்புக்கு அடுத்தபடியாக, அவன் அடையும் மிகவும் விலையுயர்ந்த அணிகலன் எதுவென்றால், ஒரு நல்ல மனைவியேயாவாள்.




எனவே அநீதியுள்ளவள் அவன் பெற்றுக்
கொள்ளக் கூடிய மோசமான ஒன்று
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-07-07 யேகோவா யீரே #3

என் மனைவி எனக்கு மிகவும் அருமையானவள், பிரன்ஹாம் குடும்பத்துக்கு ஏதாகிலும் நன்மதிப்பு கொடுக்கப்பட வேண்டுமானால், அது அவளுக்கே சேர வேண்டும்.

அவள் தான் எனக்கும் பொது ஜனத்துக்கும் இடையே இருந்தவள்.

நன்மையாக செய்யப்பட்ட அனைத்தும் அவளே செய்ததாக கருதப்பட வேண்டும்.

7. இங்குள்ள ஒவ்வொரு இளைஞனும் மணம் புரியும் போது, நானும் என் மனைவியும் ஒருமித்து கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக மகிழ்ச்சியான

மணவாழ்க்கையை நடத்தி வருவது போன்று, அவனுக்கும் ஒரு நல்ல மனைவி கிடைத்து இருவரும் சந்தோஷமாயிருப் பார்களென்று நம்புகிறேன்.

“மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்'' என்று சாலொமோன் கூறியுள்ளான் (நீதி. 18:22).

''குணசாலியான ஸ்திரீ தன் புருஷ னுக்கு கிரீடமாயிருக்கிறாள். அநீதியுள்ள வளோ அவனுடைய இரத்தத்தில் தண்ணீராக இருக்கிறாள்.” அவனுடைய இரத்த ஓட்டமே அவனுடைய ஜீவன்.

எனவே அநீதியுள்ளவள் அவன் பெற்றுக் கொள்ளக் கூடிய மோசமான ஒன்று.

ஆனால் நீதியுள்ளவளே, இரட்சிப்புக்கு அடுத்தபடியாக அவன் பெறக்கூடிய மிகவும் நன்மையான ஒன்று.

தேவன் மனிதனுக்கு மனைவியை விட நன்மையான ஒன்றைக் கொடுக்க முடிந் திருந்தால் கொடுத்திருப்பார். ஏனெனில் தேவன் தமது பிள்ளைகளுக்கு நன்மை யானவைகளையே அருளுகிறார்.

அவர் அவனுக்கு மனைவியைத் தந்திருக்கிறார். அதற்காக நான் நன்றியுள் ளவனாயிருக்கிறேன்.




அவள்
விலையேறப்
பெற்ற
ஆபரணமா
யிருக்கிறாள்.
அவள் ராணி
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-06-23E அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு

113. இரட்சிப்புக்கு அடுத்தபடியாக ஒரு மனிதனுக்கு தேவன் தரக்கூடியது ஒரு அருமையான மனைவியாகும்.


ஒரு மனிதன் களைப்புற்றிருக்கும் போது, அவனுக்கு ஆறுதல் கூற மனைவி யைத் தவிர வேறு யாருமேயில்லை.

ஒருவன் ஒரு இரகசியத்தைக் கூற வேண்டுமானால், மனைவியிடம் மாத் திரமே அதை கூற விரும்புவான்.

ஒரு நேர்மையான, ஒழுக்கமுள்ள மனைவியை நீங்கள் பெற்றிருந்தால், உங்கள் உடன் பிறந்த சகோதரர் எவ்வளவு பாக்கியசாலிகள் தெரியுமா? அவர்கள் களைத்து வரும் சமயத்தில் அவள் அவர்

களை உட்கார வைத்துப் பேசுவாள். மற்றவளைக் காட்டிலும் அவள் உங்களுக்கு அதிகம் செய்ய முடியும், அது உண்மை. அவள் விலையேறப் பெற்ற ஆபரணமாயிருக்கிறாள். அவள் ராணி.





உண்மையான கிறிஸ்தவன் எவனும் அழகு ராணிகளையும், கோரஸ் பெண்களையும், செக்ஸ் ராணிகளையும் தெரிந்து கொள்ளமாட்டான். அவன் கிறிஸ்தவ குணாதிசயம் கொண்ட பெண்ணையே தெரிந்து கொள்வான்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

27. ஒரு மனிதன் எந்த விதமான பெண்ணைத் தெரிந்து கொள்ளுகிறான் என்பதிலிருந்து, அவனுடைய ஆசை என்னவென்றும், அவனுடைய குணா திசயங்களும் புலனாகின்றன. ஒருவன் தவறான பெண்ணைத் தெரிந்து கொண் டால், அவன் எப்படிப்பட்ட குணாதிச யங்களை உடையவனாயிருக்கிறான் என்பதை அது பிரதிபலிக்கிறது. அவன் யாருடன் தன்னை இணைத்துக் கொள்ள முயல்கிறான் என்பது அவனுக்குள் உண்மையாக என்ன உள்ளது என்பதைக் காட்டுகிறது. ஒருவன் தெரிந்து கொள்ளும் மனைவி, அவனுக்குள் என்ன உள்ளது என்பதை அது காண்பிக்கின்றது. அவன்

வெளியில் என்ன கூறினாலும் அவன் மணம் புரிந்து கொள்ளும் போது அவனைக் கவனியுங்கள்.

நான் ஒரு மனிதனுடைய அலுவல கத்துக்கு செல்கிறேன். அவன் தன்னை கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள் கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் சுவர்களில் அரை நிர்வாணமான பெண்களின் படங்கள் தொங்கவிடப்பட்டு, அங்கு “பூகி-வூகி” (Booglie - wooglie) இசையும் முழங்கிக் கொண்டிருந்தால் அவன் என்ன கூறினாலும் எனக்குக் கவலையில்லை. அவனுடைய சாட்சியை நான் நம்பமாட்டேன். ஏனெனில் அவ னுடைய ஆவி உலக காரியங்களினால் போஷிக்கப்படுகின்றது.

ஒருவன் ஒரு “கோரஸ் பெண்ணையோ (Chorus girl) அல்லது செக்ஸ் ராணி

யையோ, அல்லது அழகான ஒரு நவீன ரிக்கெட்டாவையோ மணந்து கொள்வதாகக் கூறினால், அது அவனுடைய குணாதிசயங்களை பிரதிபலிக்கிறது. அவனுடைய எதிர்கால குடும்பம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று அவன் தன் மனதில் அவனுடைய குழந்தைகளைப் பெற்று வளர்க்க, அவன் அவளைத் தான். அந்த குழந்தைகளையும் அவள் வளர்ப்பாள். எனவே, ஒரு மனிதனுக்குள் என்ன உள்ளது என்பதை அது பிரதிபலிக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெண்ணைத் தெரிந்து கொள்ளும் ஒரு மனிதன், எதிர்காலத்தைக் குறித்து என்ன நினைத்திருக்கிறான் என்பது வெளிப்படையாகின்றது. ஒரு கிறிஸ்தவன் அப்படிப்பட்ட ஒரு செயலைப் புரிவான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை ஐயா. நான் அப்படி நினைக்கமாட்டேன். உண்மையான கிறிஸ்தவன் எவனும் அழகு

ராணிகளையும், கோரஸ் பெண்களையும், செக்ஸ் ராணிகளையும் தெரிந்து கொள்ள மாட்டான். அவன் கிறிஸ்தவ குணாதிசயம் கொண்ட பெண்ணையே தெரிந்து கொள்வான்.

28. நீங்கள் எல்லாவற்றையும் ஒன்றாக அடைய முடியாது. ஓ, பெண் அழகாக இருக்கலாம். மற்றொரு பெண் ஒருக்கால் மற்றவளைக் காட்டிலும் தோற்றத்தில் சிறந்தவளாயிருக்கலாம். நீங்கள் ஏதாகிலும் ஒன்றைத் தியாகம் செய்ய வேண்டும் ஆனால் ஒரு பெண், கனமுள்ள பெண் ணின் தோற்றத்தை கொண்டிராமற் போனால்... அவள் அழகாயிருந்தாலும் இல்லாமற் போனாலும் எனக்கு கவலை யில்லை. நீங்கள் அவளுடைய பண்புக் முக்கியத்துவம் கொடுங்கள் - அவள் அழகாயிருந்தாலும் இல்லாமற் போனா

லும். இப்பொழுது... ஒரு கிறிஸ்தவன் மனைவியைத் தெரிந்து கொள்ளும் போது, அவன் மறுபடியும் பிறந்த ஒரு பெண் ணையே தெரிந்து கொள்ள வேண்டும். அவள் காண்பதற்கு எப்படியிருந்தாலும் பரவாயில்லை. அவள் என்னவாயிருக்கி றாளோ, அதுதான் அவளுடைய நடத்தை. அது மாத்திரமல்ல, அத்தகைய செயல் அவனுடைய தெய்வீக பண்பைப் பிரதி பலித்து, அவனுடைய சிந்தையில் என்ன உள்ளதென்றும், அவனுடைய குடும்பம் எதிர்காலத்தில் எவ்வாறிருக்கும் என்பதை யும் எடுத்துக் காட்டுகின்றது அந்த பெண் எப்படிப்பட்ட குடும்பத்தை கட்டி வளர்ப் பாள் என்றும், அவனுடைய குடும்பத்தின் எதிர்கால திட்டம் என்னவென்றும்.

அவன் நவீன ரிக்கெட்டாக்கள், செக்ஸ் ராணிகள் போன்றவர்களில் ஒருத்தியை

மணந்தால், அவன் எதை எதிர்பார்க்க முடியும்? வீட்டில் தங்கி குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கும் நல்லொழுக்கம் அற்றவளாய், வேறு யாரோ ஒருவருடைய அலுவலகத்தில் பணிபுரியும் ஆவல் கொள்ளும் ஒரு பெண்ணை அவன் மணந்தால், அவள் எத்தகைய வீட்டுப் பணிகளைச் செய்பவளாயிருப்பாள்? நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள ஆட்களை அமர்த்த வேண்டி யிருக்கும். அது உண்மை.

29. பெண்கள் பணிபுரியும் இந்த நவீன பழக்கத்தை நான் ஆதரிப்பதில்லை. காவற்படையில் சேர்ந்துள்ள இப்பெண்கள் சீருடை அணிந்து, மோட்டார் சைக்கிள் களை ஓட்டிச் செல்வதைக் காணும் போது அநேக ஆண்கள் வேலையில்லாமல் இருக்கும் போது, பெண்களை அப்படிப்


பட்ட வேலையில் அமர்த்துவது எந்த ஒரு நகரத்துக்கும் அவமானத்தை விளைவிக்கும். நமது நகரம் கொண்டுள்ள நவீன கருத்தை அது எடுத்துக்காட்டுகிறது. அது சீர் குலைந்து வருவதைக் காண்பிக்கின்றது. நாம் பெண்களை அப்படி வெளியில் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. பெண்கள் அப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபட எந்த உரிமையும் இல்லை.

தேவன் மனிதனுக்கு மனைவியைக் கொடுத்த போது, இரட்சிப்புக்கு அடுத்த படியாக மிகச் சிறந்த ஒன்றை அவனுக்கு கொடுத்தார். ஆனால் ஒரு பெண் ஆணின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள முயன்றால், அது அவன் பெற்றுள்ள மோசமான ஒன்றாகி விடுகிறது. அது உண்மை.



நீதிமொழிகள் 31:10


குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது.






## நீதிமொழிகள் 31:10

குணசாலியான ஸ்திரீயைக்
கண்டுபிடிப்பவன் யார்?
அவளுடைய விலை
முத்துக்களைப்பார்க்கிலும்
உயர்ந்தது.








# இரட்சிப்புக்கு அடுத்தபடியாக

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து